**செ.வெ. எண்: 381** **நாள்: 03.07.2012**

**செய்தி வெளியீடு**

மக்களின் நண்பனாகவும், பாதுகாப்பு கவசமாகவும், வன்முறையாளர்களுக்கு சிம்ம சொப்பனமாகவும் காவல்துறை செயல்படுகின்ற காரணத்தால், பொதுமக்கள் எந்த ஒரு காவல் நிலையத்தையும் அச்சமின்றி அணுகி, நம்பிக்கையுடன் புகார் அளிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தியுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அமைதியான சூழ்நிலையை உருவாக்கியுள்ள காவல்துறையினரின் நலனுக்காக பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றார்கள்.

இந்த வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் திருவிழாக்கள், முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் பொதுமக்களின் பாதுகாப்புக்கென பல்வேறு மாவட்டங்களிலிருந்து காவல்துறையினர் வரவழைக்கப்படும்போது அவர்களுக்கு தங்கும் இட வசதி செய்துக் கொடுக்கப்படவேண்டியது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் 250 பெண் காவலர்கள் மற்றும் 250 ஆண் காவலர்கள் ஆக மொத்தம் 500 காவலர்கள் தங்கக்கூடிய படைக்குடியிருப்புகளை 9 கோடியே 32 லட்சம் ரூபாய் செலவில் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், அரியலூர் மாவட்டம் துவங்கப்பட்டதிலிருந்து அங்கு ஆயுதப்படை பிரிவு துவக்கப்படவில்லை என்பதையும், மற்ற மாவட்டங்களைப்போல அரியலூர் மாவட்டத்திற்கும் ஆயுதப்படை பிரிவு அமைக்கப்பட வேண்டியது அவசியம் என்பதையும் கருத்தில் கொண்டு, 188 காவலர்களைக் கொண்ட மூன்று ஆயுதப்படை பிரிவுகளையும், ஒரு தலைமையிட ஆயுதப்படை பிரிவையும் அமைக்க ஏற்கனவே ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த நடவடிக்கைக்கு மேலும் வலுவூட்டும் வகையில், தற்போது அரியலூர் மாவட்டத்திற்கு 64 காவலர்களைக் கொண்ட மேலும் ஒரு ஆயுதப்படை பிரிவை அமைத்திடவும், தலைமையிட ஆயுதப் பிரிவிற்கு கூடுதலாக 26 காவல் பணியிடங்களை தோற்றுவித்திடவும் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு 2 கோடியே 93 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

தமிழகத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்கள் மற்றும் காவல்துறை அலுவலகங்களுக்கு பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளுக்காக வருவதைக் கருத்தில் கொண்டு, காவல் நிலையங்கள் மற்றும் காவல்துறைக் கட்டடங்களை தூய்மையாகவும், சுகாதாரத்துடன் வைத்துக் கொள்ளும் வகையில் கூடுதலாக 558 துப்புரவு பணியாளர் பணியிடங்களை தோற்றுவிக்கவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இதற்காக அரசுக்கு கூடுதலாக 2 கோடியே 75 லட்சத்து 7 ஆயிரத்து 168 ரூபாய் செலவு ஏற்படும். இதன் மூலம் அனைத்து காவல் நிலையங்களும் மேலும் சுத்தமாகவும், சுகாதாரத்துடன் தூய்மையாகவும் விளங்கும்.

மேற்கூறிய அரசின் நடவடிக்கைகள் காவல் துறையினர் தங்கள் பணிகளை மேலும் திறம்பட மேற்கொள்ள வழிவகுக்கும்.

********

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9.
நாள் :– 3-7-2012.